# கல்வி நிலைங்களில் குடிமக்கள் நுகர்வோர் மன்றம் அமைத்தல் மற்றும் செயல்பாடுகள் குறித்த கருத்தரங்கம்- வழிகாட்டு பயிற்சி

சென்னை (நகரம்) வடக்கு மற்றும் தெற்கு, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் இயங்கும் கல்லூரிகளில் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் அமைத்தல் தொடர்பான ஒருநாள் வழிகாட்டு பயிற்சி சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் 07.11.2009 (சனிக்கிழமை) அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சுமார் 200க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் (பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள்) கலந்து கொண்டனர்.

இந்த ஒரு நாள் வழிகாட்டு பயிற்சியில் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு. க. ராஜாராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்து தலைமையுரையாற்றினார்கள்.அவர்களது உரையில், நுகர்வோர் எவ்வாறு விழிப்புணர்வுடன் நடந்து கொள்ளவேண்டும் என்பதன் அத்தியாவசியத்தினை சுட்டிக்காட்டி, நிலைத்த தன்மை வாய்ந்த நுகர்விற்கு தேவையற்ற நுகர்வினை தவிர்க்க வேண்டும் என்றும் சுட்டிக் காட்டினார்கள்.



தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் பிரதிநிதிகளாக திரு. டி.ஏ. பிரபாகர், திரு. கே. முருகன், திரு. எஸ். மார்டின் மற்றும் திரு. பி. உமாபதி ஆகியோர் கலந்து கொண்டு ‘குடிமக்கள் நுகர்வோர் மன்றம் அமைப்பது எப்படி? வழி நடத்தி செல்வது எப்படி?’, ‘கல்வி நிலையங்களில் குடிமக்கள் நுகர்வோர் மன்றம் அவசியம்தானா?’, ‘நுகர்வோரின் உரிமைகள்’ மற்றும் ‘நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986- நுகர்வோரின் கேடயம்’ என்ற தலைப்புகளில் சிறப்புரையாற்றினார்கள். சிறப்புரையின்போது உணவு கலப்படம், உணவு பாதுகாப்பு, நுகர்வோர் நீதிமன்றங்களின் செயல்பாடுகள் மற்றும் நுகர்வோர் கல்வி குறித்து உரையாற்றினார்கள்.



குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் எவ்வகையில் விழிப்புணர்வு பெற்ற சமுதாயம் மலர வித்தாகும் என்பது குறித்தும், குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் அமைத்தலில் ஏற்பட்ட அனுபவ பகிர்வுகளையும், டாக்டர். சி. மூர்த்தி, உதவி பேராசிரியர், குருநானக் கல்லூரி, டாக்டர், எல், விஜயலஷ்மி, இணைப் பேராசிரியர் , வைஷ்ணவ கல்லூரி, திருமதி. எம்.எஸ். ராஜேஸ்வரி, அன்னை வேளாங்கண்ணி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் திருமதி. வள்ளி திருமூர்த்தி, விரிவுரையாளர், சி.டி.டி.இ. மகளிர் கல்லூரி ஆகியோர் கல்லூரிகளின் சார்பில் கலந்து கொண்டு விரிவுரையாற்றினார்கள். குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் கல்லூரிகளில் தோற்றுவிக்கப்பட்ட பின்னர் மாணவர்களிடையே எந்த அளவிற்கு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது என்பது குறித்தும், நுகர்வோர் கல்வியில் மாணவ/ மாணவர்களின் ஆர்வம் குறித்தும் எடுத்துரைத்தார்கள்.



எத்திராஜ் கல்லூரி செல்வி. ஸ்வாதி சேகர், குடிமக்கள் நுகர்வோர் மன்றம் மாணவர்களிடையே ஏற்படுத்திய தாக்கம் குறித்தும், அவர்களது கல்லூரியில் இயங்கும் நுகர்வோர் மன்றம், “கன்சூயூமர் கனெக்ட்” என்ற செய்தி கடிதம் வெளியிட்ட அனுபவம் குறித்தும், தெளிவாக விளக்கினார்.

ஒருநாள் வழிகாட்டு பயிற்சிக்கு வருகை புரிந்தோரை வரவேற்று, ஆணையர் அலுவலகத்தினைச் சேர்ந்த திருமதி. ஜெ. விஜயதிலகம் வரவேற்புரை நல்கி, நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கியதுடன் நிகழ்ச்சிக்கான நன்றியுரையினையும் நவின்றார். நுகர்வோர் பாதுகாப்பு பிரிவின் கண்காணிப்பாளர் திரு. சி. முத்துகிருஷ்ணன் அவர்கள் இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மிகவும் சிறப்பாக அமைத்து தந்தார். திரு.ப.சம்பத் மற்றும் திருமதி.வி.விஜயலஷ்மி அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய உறுதுணையாக உதவினார்கள். விழா தேசிய கீதத்துடன் இனிதே நிறைவுற்றது.